2. அறிவிப்புகள். (தொடர்ச்சி)

(இ) ஆந்திரா 1979 ஆம் ஆண்டு நிலவரி விதிப்பு (தரப் படுத்துதல்) ரத்துச் சட்ட முன்வடிவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. ஆந்திரா 1979 ஆம் ஆண்டு நிலவரி விதிப்பு (தரப் படுத்துதல்) ரத்துச் சட்ட முன்வடிவை இப்பேரவையில் அறி முகம் செய்ய ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித் துள்ளார்கள்.

(3) அரசினர் சட்ட முன்வடிவுகள் (தொடர்ச்சி)

(இ) ஆந்திரா 1979 ஆம் ஆண்டு நிலவரி விதிப்பு (தரப்படுத்துதல்) ரத்துச் சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே ''ஆந்திரா 1979 ஆம் ஆண்டு நிலவரி வதிப்பு (தரப்படுத்துதல்) ரத்துச் சட்ட முன்வடிவை'' பேரவைமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

திரு. க. சுப்பு: இதுவும் அப்படித்தான். இந்த ஆர்டர் தேவையில்லை. ஏற்கனவே எக்சிகியூட்டிவ் ஆர்டர் போட்ட பின்னால், லெஜிஸ்லேஷன் தேவை என்றால் ஏன் எக்சிகியூட்டிவ் ஆர்டரைப் போட்டீர்கள்? சட்டத்தைக் கொண்டு வருவதற்கு முன்னால் அதைப்பற்றி எல்லாம் யோசிக்கவில்லையா? இங்கே 'லா' டிப்பார்ட்மென்ட் இல்லையா? லா டிப்பார்ட்மென்ட் 'லோ' டிப்பார்ட்மென்டாகப் போய்விட்டதா? இதற்கு என் னுடைய எதிர்ப்பைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:— ''ஆந்திரா 1979 ஆம் ஆண்டு நிலவரி விதிப்பு (தரப்படுத்துதல்) ரத்துச் சட்ட முன்வடிவை அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம்செய்யப் பெற்றிருக்கிறது.

(ஈ) புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைக்காரர்கள் (தற்காலிக நிவாரண) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே தமிழ்நாடு 1979ஆம் ஆண்டு புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைக்காரர்கள் (தற்காலிக நிவாரண) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, தற்காலிக நிவாரணம் என்ற பெயரால் மூன்று தடவை சட்டம் வந்து விட்டது. ஏற்கனவே நிரந்தர நிவாரணம் அளிக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். ஆனால் நீங்கள் நிரந்தர நிவாரணம் அளிப்பதற்குப் பதிலாக 'அரியர்ஸ்' வசூலிப்பதை தள்ளிப்போடுகிறீர்கள். இது அவர்களுக்கு நிவாரணமாகாது. 'ஆப்ஜெக்ட்ஸ் அண்ட் ரீசன்ஸ்'ல் நோக்கத்தைச் சொல்லியிருக்கிறீர்கள். நோக்கத்திற்கும் ரீசனுக்கும் என்ன தொடர்பு என்று தெரியவில்லை. தலைவலிக்கு தலையணையை மாற்றுவதைப்போல இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறீர்கள். இது கண்டிக்கத்தக்கது; வருந்தத்தக்கது; இதை ஏற்க முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :—"தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைக்காரர்கள் (தற்காலிக நிவாரண) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(4) முதல் துணை நிதி அறிக்கை—1979–80.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டின் முதலாவது துணை மதிப்பீடுகளை அவையில் வைக்க முன் வந்துள்ளேன். மானியக் கோரிக்கைகளை விளக்கும் விரிவான அறிக்கை ஒன்றும் அவை முன் வைக்கப்பட்டுள்ளது.